ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021 திசெம்பர் 20

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 ஒத்தோபர்

## பொதுநோக்கு

வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2020 ஒத்தோபரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 509 மில்லியனிலிருந்து 2021 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 495 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஒத்தோபரில் வரலாற்றில் முதற்தடவையாக உயர்ந்தளவிலான மாதாந்த ஏற்றுமதிப் பெறுமதியினைப் பதிவுசெய்த அதேவேளையில், தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாக ஐ.அ.டொலர் 1.0 பில்லியனிற்கு மேலான ஏற்றுமதி வருவாய்களைப் பதிவுசெய்தது. மேம்பாடடைந்துவரும் நாணய மாற்றல்களுடன் கூடிய ஏற்றுமதி வருவாய்களின் இத்தகைய அதிகரிப்பு எதிர்வரும் காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதிச் செலவினமும் 2021 ஒத்தோபரில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முன்னைய மாதத்திலும் பார்க்க குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்புடன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தன. 2021 ஒத்தோபரில் தொழிலாளர் பணவனுப்பல்களில் மேலுமொரு மிதமான போக்கு அவதானிக்கப்பட்டது. இம்மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடனடி செலாவணி வீதம் ஐ.அ.டொலரொன்றிற்கு ஏறத்தாழ 201 ரூபாவாகக் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | ஒத்தோபர் 2020 ஐ.அ.டொ.மில் | ஒத்தோபர் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-ஒத் 2020 ஐ.அ.டொ.மில் | சன-ஒத் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 854 | 1,200 | 40.4 | 8,299 | 10,134 | 22.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,363 | 1,694 | 24.3 | 13,145 | 16,632 | 26.5 |
| வர்த்தக மீதி | -509 | -495 | | -4,846 | -6,498 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 31 (இ) | - | 682 (ஆ) | 82 (இ) | -88.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 631 | 317 | -49.7 | 5,680 | 4,895 | -13.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | 21 | -7 | | -194 | -222 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 251 | 0.01 (உ) | | 1,814 | 2,135 (ஊ) | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 1 | 0.01 | | 103 | 16 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 251 | வி.கி. | | 1,712 | 2,118 (ஊ) | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்)(எ) | | | | 351 | 398 | |
| திரண்ட நிலுவை | | | | -2,083 | -3,261 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2020 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றுக்கு சராசரி செலவிடும் மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(உ) அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்களின் தரவுகள் 2021 ஒத்தோபரின் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கவில்லை
(ஊ) நீண்ட காலக் கடன்களுக்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் வெளிநாட்டுக் கடன்களை 2021 செத்தெம்பர் வரை மாத்திரம் உள்ளடக்கியுள்ளன
(எ) முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக ஒவ்வொரு ஆண்டினதும் முதல் ஆறு மாதங்களுக்கான தரவுகள்

இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2020 ஒத்தோபரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 509 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 495 மில்லியனிற்குச் சுருக்கமடைந்து 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட அதே மட்டத்தில் காணப்பட்டது. வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறை 2020 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,846 மில்லியனிலிருந்து 2021இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,498 மில்லியனிற்கு விரிவடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் 1.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பினை விட விஞ்சிக் காணப்பட்டமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – ஒத்தோபர் காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டுக்காண்டு அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020–2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 மாச்சில் (ஐ.அ.டொலர் 1,137 மில்லியன்) பதிவுசெய்யப்பட்ட முன்னைய உயர்ந்தபட்ச அளவினை விஞ்சிக் காணப்பட்டதுடன் 2020 ஒத்தோபரிலும் பார்க்க 2021 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 1,200 மில்லியனை அடையும் விதத்தில் 40.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்தளவிலான மாதாந்த ஏற்றுமதிகளைப் பதிவுசெய்திருந்தன.** வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாய்களில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்ட வேளையில், கனிப்பொருள் ஏற்றுமதிகளில் சிறிதளவிலான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 2020 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,299 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10,134 மில்லியனாக விளங்கி 22.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் 49.3 சதவீதத்தினால் அதிகரித்தன. புடவைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, போக்குவரத்து சாதனங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் இறப்பர் பொருட்கள் போன்ற பாரிய ஏற்றுமதிப் பிரிவுகளின் வருவாய்கள் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் வகையின் (முக்கியமாக பிளாத்திக்கு ஆடைப் பொருட்கள்) வருவாய்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சகல முக்கிய சந்தைகளுக்குமான ஆடைகளின் ஏற்றுமதிகள் மேம்பட்டுக் காணப்பட்டன. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மற்றும் பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்களின் சகல துணைப் பிரிவுகளின் கீழான ஏற்றுமதிகள் அதிகரித்து காணப்பட்ட அதேவேளை, போக்குவரத்துச் சாதனங்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு இரு கப்பல்களின் ஏற்றுமதியே முக்கிய காரணமாகும். பெற்றோலிய உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு உயர்ந்தளவிலான விலைகளைப் பிரதிபலிக்கும் நீக்கல எரிபொருள் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. இறப்பர் டயர்கள் மற்றும் கையுறைகள் என்பன இறப்பர் உற்பத்திகளிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்குக் காரணமாகின.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வாசனைத் திரவியங்கள், கடலுணவு, தெங்கு மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2.4 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) குறைவடைந்தமைக்கு 2021 ஒத்தோபரில் காணப்பட்ட தாழ்ந்தளவிலான ஏற்றுமதி விலைகள் (7.3 சதவீதத்தினால்) காரணமாயமைந்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் சிறிதளவு குறைவடைந்தமைக்கு மண் மற்றும் கற்களிலிருந்தான தாழ்ந்த வருவாய்களே காரணமாகும்.

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளது.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்**: 2021 ஒத்தோபரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணும் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 9.5 சதவீதத்தினாலும் 28.3 சதவீதத்தினாலும் ஆண்டிற்காண்டு அடிப்படையில் அதிகரித்தன. இது ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவு மற்றும் விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கம் காரணமாயமைய முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: மாதாந்த ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஒத்தோபர் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஒத்தோபர் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஒத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஒத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **639.1** | **954.0** | **49.3** | **6,319.1** | **7,853.0** | **24.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 39.1 | 79.0 | 102.4 | 387.7 | 476.7 | 23.0 |
| விலங்குத்தீன் | 4.7 | 12.6 | 167.6 | 88.6 | 98.5 | 11.2 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 358.2 | 510.6 | 42.5 | 3,645.0 | 4,403.9 | 20.8 |
| இதில் ஆடைகள் | 325.7 | 467.0 | 43.4 | 3,245.4 | 4,011.3 | 23.6 |
| புடவைகள் | 26.3 | 30.7 | 16.7 | 207.9 | 285.5 | 37.3 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 6.2 | 12.8 | 106.2 | 191.8 | 107.0 | -44.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 77.9 | 88.7 | 13.8 | 644.8 | 861.3 | 33.6 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 16.2 | 33.4 | 105.4 | 139.2 | 228.8 | 64.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 20.8 | 45.5 | 119.2 | 266.1 | 412.0 | 54.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 4.2 | 43.2 | 918.2 | 58.7 | 126.5 | 115.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 24.4 | 47.7 | 95.9 | 321.1 | 396.3 | 23.4 |
| இரசாயன உற்பத்திகள் | 16.0 | 19.1 | 19.2 | 139.7 | 182.0 | 30.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 8.1 | 12.9 | 59.4 | 82.5 | 105.6 | 28.0 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 2.6 | 1.7 | -36.4 | 38.9 | 41.8 | 7.4 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 3.0 | 5.2 | 73.3 | 47.0 | 44.5 | -5.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 42.6 | 7.0 | -83.5 | 149.3 | 64.2 | -57.0 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 5.8 | 13.5 | 132.7 | 90.4 | 124.8 | 38.1 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1.7 | 3.2 | 92.1 | 18.2 | 31.0 | 70.3 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 13.9 | 30.8 | 122.2 | 202.1 | 255.1 | 26.2 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **211.4** | **241.6** | **14.3** | **1,949.9** | **2,228.3** | **14.3** |
| தேயிலை | 112.2 | 109.5 | -2.4 | 1,031.8 | 1,096.1 | 6.2 |
| இறப்பர் | 2.4 | 3.2 | 33.5 | 22.3 | 35.6 | 59.8 |
| தேங்காய் | 32.5 | 40.3 | 24.1 | 289.8 | 353.1 | 21.8 |
| வாசனைத்திரவியங்கள் | 33.6 | 44.9 | 33.6 | 266.7 | 364.5 | 36.7 |
| காய்கறிகள் | 4.4 | 2.4 | -44.9 | 32.9 | 22.7 | -31.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.0 | 1.8 | -10.2 | 21.7 | 24.4 | 12.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 8.7 | 15.0 | 71.9 | 119.8 | 119.4 | -0.3 |
| கடலுணவு | 15.6 | 24.4 | 57.0 | 165.0 | 212.5 | 28.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.2** | **2.2** | **-0.4** | **18.1** | **36.0** | **98.5** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.6** | **1.8** | **13.2** | **12.2** | **16.7** | **36.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **854.3** | **1,199.6** | **40.4** | **8,299.3** | **10,133.9** | **22.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 ஒத்தோபரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,363 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 1,694 மில்லியனிற்கு 24.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** இடைநிலைப் பொருட்களினதும் முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட வேளையில், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினத்தில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் மொத்த இறக்குமதிச் செலவினம் 2020 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 13,145 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 16,632 மில்லியனாக காணப்பட்டது.

**நுகர்வுப் பொருட்கள்:** நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 ஒத்தோபரிலும் பார்க்க 2021 ஒத்தோபரில் 7.1 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு உணவு மற்றும் குடிபானங்கள் மீதான தாழ்ந்த செலவினம் காரணமாயமைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 5.6 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதி முக்கிய காரணமாயமைந்தது. வீட்டு உபயோகப்பொருட்கள் (முக்கியமாக வானொலி அலை பெறுநர்கள் மற்றும் தொலைக்காட்சித் தொகுதிகள்) மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் உள்ளடங்கலான உணவல்லா நுகர்வுப் பொருட்களின் ஏனைய சில வகைகளின் இறக்குமதிகளும் அதிகரித்துக் காணப்பட்டன. அதேவேளை, உணவு மற்றும் குடிபான இறக்குமதிகளின் மீதான செலவினம் 2021 ஒத்தோபரில் 20.5 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு சீனி இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாகும். மேலும், எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் (முக்கியமாக தேங்காய் எண்ணெய்), வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்), கடலுணவு (முக்கியமாக புதிய மீன்) மற்றும் பழவகைகளில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டிருந்தன. பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), காய்கறிகள் (முக்கியமாக பருப்பு வகைகள்) மற்றும் குடிபானங்கள் (முக்கியமாக மதுபான குடிவகைகள்) போன்ற உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

**இடைநிலைப் பொருட்கள்:** எரிபொருள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முக்கியமாக துணிகள் மற்றும் நூலிழை), கோதுமை, அடிப்படை உலோகம் மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் போன்ற இறக்குமதிகளினால் உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 ஒத்தோபரிலும் பார்க்க 2021 ஒத்தோபரில் 38.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. தாழ்ந்த இறக்குமதி அளவுகளுக்கு மத்தியிலும், எரிபொருள் மீதான செலவினம் 2021 ஒத்தோபரில் 72.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு மசகெண்ணெய்யின் இறக்குமதி விலை 76.0 சதவீதத்தினாலும் (2020 ஒத்தோபரில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 41.77 இலிருந்து 2021 ஒத்தோபரில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 73.51 இற்கு), சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பவற்றின் இறக்குமதி விலைகள் முறையே 88.1 மற்றும் 148.2 சதவீதங்களினாலும் (ஆண்டிற்காண்டு) அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, வளமாக்கிகள், தயாரிக்கப்படாத புகையிலை, தங்கம் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்து காணப்பட்டது.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2021இன் அதே மாதத்தில் 11.5 சதவீதத்தினால் அதிகரித்தது. பொறி மற்றும் சாதனங்கள் (முக்கியமாக மருத்துவ மற்றும் ஆய்வுகூட சாதனங்கள், பொறியியல் சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்) மற்றும் கட்டடவாக்கப் பொருட்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு) என்பவற்றின் கீழான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பொன்று 2021 ஒத்தோபரில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க இறக்குமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, போக்குவரத்து சாதனங்கள் மீதான செலவினம் குறைவடைந்தமைக்கு வர்த்தக ரீதியிலான ஊர்திகள் மீதான தாழ்ந்த இறக்குமதிச் செலவினமே காரணமாகும்.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2021 ஒத்தோபரில் இறக்குமதி அளவுச் சுட்டெண்கள் 1.6 சதவீதத்தினால் குறைவடைந்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் 26.4 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்து, இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பிற்கு விலைத் தாக்கமே முக்கிய காரணமென்பதனை எடுத்துக்காட்டியிருந்தது.

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றும்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 8: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 9: மாதாந்த இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | ஒத்தோபர் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஒத்தோபர் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஒத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஒத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **251.6** | **233.6** | **-7.1** | **2,818.4** | **3,123.6** | **10.8** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 122.8 | 97.7 | **-20.5** | 1,271.7 | 1,359.4 | 6.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.3 | 3.9 | 21.0 | 27.4 | 31.4 | 14.5 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 20.3 | 22.9 | 12.9 | 273.3 | 293.6 | 7.4 |
| காய்கறிகள் (ஆ) | 17.6 | 18.9 | 7.3 | 280.1 | 321.5 | 14.8 |
| கடலுணவு | 11.5 | 10.7 | -6.5 | 164.9 | 102.8 | -37.7 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 32.8 | 10.2 | -69.0 | 233.4 | 224.9 | -3.6 |
| வாசனைத்திரவியங்கள் | 11.7 | 9.3 | -20.1 | 106.0 | 107.8 | 1.7 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 25.8 | 21.7 | -15.7 | 186.6 | 277.5 | 48.7 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 128.7 | 136.0 | 5.6 | 1,546.7 | 1,764.2 | 14.1 |
| தனியாள் ஊர்திகள் | 0.5 | 1.7 | 210.3 | 281.9 | 11.5 | -95.9 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 51.9 | 48.7 | -6.1 | 493.6 | 689.4 | 39.7 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 16.8 | 18.6 | 10.7 | 134.2 | 213.4 | 59.0 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 12.8 | 19.8 | 54.8 | 165.9 | 176.6 | 6.5 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 15.1 | 16.5 | 9.2 | 210.7 | 323.7 | 53.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 13.5 | 13.4 | -1.0 | 118.0 | 131.5 | 11.4 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 18.1 | 17.3 | -4.4 | 142.4 | 218.1 | 53.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **817.5** | **1,132.6** | **38.6** | **7,393.2** | **9,923.4** | **34.2** |
| எரிபொருள் | 223.4 | 385.0 | 72.3 | 2,128.6 | 2,981.8 | 40.1 |
| இதில் மசகெண்ணெய் | 28.0 | 48.9 | 74.7 | 479.2 | 565.3 | 18.0 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 172.0 | 280.2 | 62.9 | 1,481.3 | 2,191.5 | 48.0 |
| நிலக்கரி | 23.4 | 55.8 | 138.2 | 168.1 | 224.9 | 33.8 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 13.5 | 19.1 | 41.6 | 80.7 | 113.2 | 40.3 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 218.1 | 265.8 | 21.9 | 1,883.6 | 2,471.7 | 31.2 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 35.0 | 36.8 | 5.2 | 312.1 | 392.3 | 25.7 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 14.2 | 18.1 | 27.0 | 161.8 | 222.9 | 37.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 24.1 | 70.0 | 190.8 | 314.1 | 361.4 | 15.1 |
| அடிப்படை உலோகங்கள் | 63.4 | 89.7 | 41.4 | 385.4 | 655.8 | 70.2 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 51.8 | 53.1 | 2.6 | 440.3 | 623.9 | 41.7 |
| இரசாயன உற்பத்திகள் | 71.8 | 78.0 | 8.7 | 669.9 | 889.2 | 32.7 |
| வளமாக்கி | 22.5 | 15.6 | -30.7 | 161.5 | 120.0 | -25.7 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 17.4 | 32.8 | 88.6 | 182.7 | 323.4 | 77.0 |
| கனிம உற்பத்திகள் | 11.5 | 11.1 | -3.2 | 143.5 | 125.9 | -12.3 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 50.9 | 57.6 | 13.1 | 529.0 | 642.0 | 21.4 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **293.5** | **327.3** | **11.5** | **2,920.9** | **3,576.1** | **22.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 183.0 | 205.5 | 12.3 | 1,764.7 | 2,254.9 | 27.8 |
| கட்டடப் பொருட்கள் | 87.5 | 103.7 | 18.5 | 852.2 | 1,004.1 | 17.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 22.8 | 17.7 | -22.1 | 301.3 | 312.4 | 3.7 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.2 | 0.4 | 61.4 | 2.6 | 4.7 | 78.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.2** | **0.7** | **262.9** | **12.4** | **8.7** | **-30.0** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,362.8** | **1,694.3** | **24.3** | **13,145.0** | **16,631.8** | **26.5** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,139.4** | **1,309.3** | **14.9** | **11,016.4** | **13,650.0** | **23.9** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 ஒத்தோபரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 631 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 317 மில்லியனாக விளங்கின. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 சனவரி-ஒத்தோபர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,895 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 13.8 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. முக்கியமாக தேர்ச்சிபெற்ற (5,464), தேர்ச்சியற்ற (3,847) மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் (3,820) வகைகளின் கீழ் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபர் மாத காலப்பகுதியில் 15,733 இற்கு 28.2 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து, தொழிலாளர் பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்காக 2021 திசெம்பர் முதல் இலக்கிடப்பட்ட வழிமுறைகளுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் எதிர்வரும் காலப்பகுதியில் அதிகரிக்கும் சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளது.

**சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அண்மைய மாதங்களில் தொடர்ந்தும் மேம்பாடடைந்து காணப்பட்டன.** இதற்கமைய, 2021 ஒத்தோபரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 13,547 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 22,771 ஆக பதிவுசெய்யப்பட்டன. மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020 ஒத்தோபர் வரையான பத்து மாத காலத்திற்கான 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2021இன் தொடர்பான காலப்பகுதியில் 60,695 வருகைகளாகப் பதிவுசெய்யப்பட்டன. 2021 ஒத்தோபர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக இந்தியா, ஐக்கிய இராச்சியம், பாகிஸ்தான், ருசியா மற்றும் ஜேர்மனி என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 31 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன. சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020 ஒத்தோபர் வரையான பத்து மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இன் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 82 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**2021 ஒத்தோபரில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.** 2021 ஒத்தோபர் வரையான பத்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 28 மில்லியனாக விளங்கிய வேளையில், வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 ஒத்தோபர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 9 மில்லியனாகத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 ஒத்தோபரில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்து 2021 ஒத்தோபர் வரையான பத்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 222 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைத் தோற்றுவித்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 2.3 பில்லியனாக விளங்கின.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இம்மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) 3 வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 5.6 பில்லியனாக விளங்கின.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடனடி செலாவணி வீதம் 2021 செத்தெம்பர் முதலாம் வாரத்தை தவிர 2021 ஏப்ரல் முதலாம் வாரத்திலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கு ரூ.200 - ரூ.203 எனும் மட்டத்தினுள் பரந்தளவில் உறுதியாகக் காணப்பட்டது.** ஒட்டுமொத்தமாக, 2021 திசெம்பர் 20 வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 8.2 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2021 திசெம்பர் 20 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஸ்ரேலிங் பவுன், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கு எதிராக தேய்வடைந்த வேளையில் யப்பானிய யென் மற்றும் யூரோவிற்கு எதிராக உயர்வடைந்து காணப்பட்டது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | 2021 ஒத்தோபர் உயர்வு (+)/ தேய்வு (-) | 2021 (திசெம்பர் 20 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -0.9% | -8.2% |
| யூரோ | +2.6% | -11.2% | -1.5% | +0.5% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -3.4% | -5.2% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | +0.6% | +1.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -5.4% | -0.6% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -0.4% | -4.6% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு I:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | ஒத்தோபர் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஒத்தோபர் 2020 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஒத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஒத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **207.1** | **277.6** | **34.1** | **2,017.7** | **2,297.1** | **13.8** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 17.8 | 27.9 | 57.0 | 186.1 | 244.5 | 31.4 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 5.0 | 7.2 | 45.7 | 52.2 | 57.4 | 10.1 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 33.7 | 46.1 | 37.0 | 338.3 | 384.2 | 13.6 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அதன் தயாரிப்புக்கள் | 140.9 | 152.3 | 8.1 | 1,270.9 | 1,430.9 | 12.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **10.4** | **13.5** | **29.4** | **96.9** | **112.7** | **16.3** |
| 11 குடிபானங்கள் | 3.1 | 3.0 | -2.6 | 26.5 | 26.0 | -1.8 |
| 12. புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 7.3 | 10.5 | 42.9 | 70.4 | 86.6 | 23.0 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **35.3** | **36.1** | **2.4** | **301.2** | **358.1** | **18.9** |
| 23 மசகு இறப்பர் | 2.4 | 3.3 | 33.1 | 23.0 | 36.4 | 58.0 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 23.8 | 21.4 | -9.8 | 193.7 | 202.0 | 4.3 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **24.4** | **47.7** | **95.9** | **321.1** | **396.3** | **23.4** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 24.4 | 47.7 | 95.9 | 302.0 | 359.5 | 19.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | ... | - | 19.1 | 36.9 | 92.8 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **10.5** | **12.8** | **21.1** | **78.0** | **105.6** | **35.4** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 8.6 | 7.4 | -13.9 | 65.3 | 69.0 | 5.7 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **22.7** | **24.0** | **5.9** | **182.7** | **235.9** | **29.2** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **105.5** | **162.3** | **53.9** | **1,102.2** | **1,388.2** | **25.9** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 51.9 | 60.9 | 17.5 | 448.2 | 558.4 | 24.6 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 24.8 | 41.4 | 67.1 | 352.1 | 373.1 | 6.0 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 18.6 | 39.2 | 111.2 | 166.8 | 277.3 | 66.2 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **24.3** | **87.1** | **257.9** | **313.6** | **523.7** | **67.0** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 15.6 | 27.1 | 73.0 | 195.4 | 262.0 | 34.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **414.2** | **538.5** | **30.0** | **3,885.9** | **4,715.6** | **21.4** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 390.8 | 498.0 | 27.4 | 3,573.5 | 4,345.1 | 21.6 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **-** | **...** | **-** | **0.03** | **0.8** | **2185.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **854.3** | **1,199.6** | **40.4** | **8,299.3** | **10,133.9** | **22.1** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு II:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | ஒத்தோபர் 2020 (ஐ.அ.டொ. மில்) | ஒத்தோபர் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஒத் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-ஒத் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **153.8** | **184.5** | **20.0** | **1,738.2** | **1,869.8** | **7.6** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 20.4 | 22.9 | 12.4 | 273.7 | 293.9 | 7.4 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 11.5 | 10.8 | -6.1 | 165.8 | 103.7 | -37.4 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 26.6 | 74.0 | 177.7 | 339.3 | 391.1 | 15.3 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 24.4 | 25.2 | 3.3 | 335.2 | 377.4 | 12.6 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 32.8 | 10.2 | -69.0 | 233.4 | 224.9 | -3.6 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அதன் தயாரிப்புக்கள் | 14.3 | 12.6 | -11.3 | 134.8 | 141.9 | 5.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **6.4** | **5.4** | **-16.3** | **80.4** | **62.2** | **-22.6** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **30.8** | **49.9** | **62.1** | **370.3** | **470.2** | **27.0** |
| 23 மசகு இறப்பர் | 14.3 | 28.6 | 99.6 | 152.5 | 283.7 | 86.0 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 3.0 | 4.1 | 38.2 | 70.9 | 20.1 | -71.6 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **223.4** | **385.0** | **72.3** | **2,128.6** | **2,981.8** | **40.1** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 172.5 | 296.6 | 71.9 | 1,748.7 | 2,465.1 | 41.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 27.5 | 32.6 | 18.6 | 211.7 | 291.7 | 37.8 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **20.3** | **15.7** | **-22.8** | **148.5** | **246.0** | **65.7** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 19.3 | 13.7 | -28.9 | 141.4 | 226.0 | 59.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **195.4** | **192.2** | **-1.7** | **1,737.2** | **2,288.9** | **31.8** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 46.7 | 44.1 | -5.5 | 455.8 | 639.6 | 40.3 |
| 56 வளமாக்கி, மற்றும் தயாரிக்கப்பட்டவை | 22.4 | 15.5 | -30.8 | 161.2 | 119.4 | -25.9 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 36.3 | 37.1 | 2.4 | 298.6 | 456.2 | 52.8 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 13.9 | 13.5 | -2.7 | 118.0 | 137.8 | 16.8 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **428.2** | **523.2** | **22.2** | **3,625.7** | **4,795.7** | **32.3** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 33.2 | 34.5 | 4.0 | 301.3 | 372.0 | 23.5 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 215.5 | 258.3 | 19.9 | 1,812.3 | 2,425.5 | 33.8 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 37.8 | 44.2 | 17.0 | 430.6 | 422.7 | -1.8 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 82.0 | 116.9 | 42.6 | 508.2 | 808.1 | 59.0 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **235.6** | **257.0** | **9.1** | **2,657.4** | **3,129.6** | **17.8** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 36.5 | 47.0 | 28.7 | 346.6 | 533.5 | 53.9 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 37.5 | 44.1 | 17.7 | 424.8 | 501.1 | 18.0 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 18.3 | 19.7 | 7.5 | 162.4 | 269.1 | 65.7 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 40.6 | 47.9 | 17.8 | 397.1 | 656.9 | 65.4 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 55.7 | 60.6 | 8.7 | 455.2 | 598.6 | 31.5 |
| 78 வீதி ஊர்திகள் | 22.0 | 20.1 | -8.7 | 516.7 | 283.5 | -45.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **66.2** | **80.5** | **21.7** | **645.4** | **777.5** | **20.5** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 11.5 | 17.3 | 49.8 | 140.4 | 151.6 | 8.0 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 16.3 | 21.1 | 30.0 | 154.2 | 200.0 | 29.7 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **2.6** | **0.9** | **-66.3** | **13.4** | **9.9** | **-26.0** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,362.8** | **1,694.3** | **24.3** | **13,145.0** | **16,631.8** | **26.5** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf